# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 27 வியாழக்கிழமை 12.12.2024 கதிர் 78



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு - Yarl Muttram Youtube Channel




## யாழ்ப்பாணத்தில்

# கூரைமேல் சோலர் அனுமதி முறைகேடு நடந்தது உறுதி!

### – பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு நடவடிக்கை –

Public Utilities Commission of Sri Lanka

(யாழ்ப்பாணம், டிச. 12)

யாழ்ப்பாணத்தில் பெரும் சர்ச்சைக்கு உள்ளாகி இருக்கும் சோலர் அனுமதி வழங்கல் தொடர்பில் இலங்கை மின்சார சபையின் யாழ்ப்பாணப் பிராந்தியப் பொறியியலாளர் அலுவலகம் தவறிழைத்திருப்பதாகக் குறிப்பிட்டுள்ள இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக குழு, பாதிக்கப்பட்ட பாவனையாளருக்கு உடனடியாக நீதி வழங்குமாறும் பணித்திருக்கிறது.

மேலும், பாவனையாளர் ஒருவருக்கு இணைப்பு அனுமதி வழங்குவதற்காகப் பாவனையாளரிடமிருந்து பணம் அறவிடப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்படும் உள்ளக சுற்று நிருபங்கள் அல்லது பொது நடைமுறைகள் மற்றும் ஆவணங்கள் ஏதுமிருப்பின் அது பற்றித் தங்களுக்கு அறியத்தருமாறும் இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பாவனையாளர் விவகாரங்களுக்கான பணிப்பாளர் யசந்த ரதுவிதான இலங்கை மின்சார சபையின் பிரதம பொறியியலாளரைக் கடிதம் மூலம் கேட்டுள்ளார்.

7

## ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் கையளிப்பு!

(கொழும்பு, டிச. 12)

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளின் படி, ஐக்கிய மக்கள் சக்திக்குக் கிடைத்த தேசியப் பட்டியல் ஆசனங்களின் விவரங்கள் முடிவு செய்யப்பட்டு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய மக்கள் சக்திக்கும், அதன் பங்காளிக் கட்சிகளுக்கும் தலா ஒவ்வொரு ஆசனங்கள் வீதம் அவை பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாகக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதன்படி, ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த சுஜீவ சேனசிங்ஹ, தமிழ் முற்போக்கு கூட்டணியைச் சேர்ந்த மனோ கணேசன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நிசாம் காரியப்பர் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அச்சு மொஹமட் ஆகியோர் ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் மூலமான நாடாளுமன்ற உறுப்பினர்களாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

இதேவேளை, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் செயலாளர் நிசாம் காரியப்பரின் பெயர் சேர்க்கப்படாமல், தேசியப் பட்டியல் சமர்ப்பிப்பதற்கு இடைக்காலத் தடை விதிக்க வேண்டும் எனக்கோரி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தாக்கல் செய்த மனுவை ஏற்றுக் கொண்ட கொழும்பு மாவட்ட நீதிமன்றம், ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியலுக்கு இடைக்காலத் தடை விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

(முன்னர் வெளிவந்த செய்தி 2ஆம் பக்கத்தில்)

(ஐ–12)

## எலிக்காய்சல் தொடர்பில் நிபுணர் குழு கள ஆய்வு!



(யாழ்ப்பாணம், டிச.12)

யாழ் மாவட்டத்தில் அண்மைக்காலமாகப் பரவிவரும் எலிக்காய்சலை அடுத்து ஏற்பட்டுள்ள அவசர நிலைமைகளைக் கருத்தில் கொண்டு கொழும்பிலிருந்து வருகை தந்த நிபுணர் குழு ஒன்று கள ஆய்வில் ஈடுபட்டது.

கொழும்பு தொற்று நோய்யியல் பிரிவை சேர்ந்த வைத்தியர் பிரபா அபயக்கோன் தலைமையிலான குழுவினரே இன்று யாப்பாணத்துக்கு வருகை தந்து கள ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுப்பட்டுள்ளனர்.

இன்று காலை யாழ். போதான வைத்தியசாலைக்கு விஜயம் செய்த குழுவினர், அங்கு ஆய்வு நடவடிககைளில் ஈடுபட்டதுடன் வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி மற்றும் பொது வைத்திய நிபுணர் த.பேரானந்தராஜா ஆகியோருடன்கலந்துரையாடி நிலமைகளைக் கேட்டறிந்து கொண்டனர்.

7

## கைதி உயிரிழப்பு!

(யாழ்ப்பாணம், டிச. 12)

சிறைச்சாலையில் இருந்து, நீதிமன்றத்துக்கு அழைத்துவரப்பட்ட கைதி ஒருவர் நீதிமன்ற வளாகத்தில் விழுந்து உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் இன்று காலை, யாழ்ப்பாணம் நீதிமன்ற வளாகத்தில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நாவற்குழி ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த 40 வயதான இரத்தினசிங்கம் சந்திரகுமார் என்பவரே வழக்கு விசாரணைக்காக யாழ்ப்பாணம் நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டபோது நீதிமன்ற வளாகத்தில் விழுந்து உயிரிழந்தவராவார்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் பொலீஸார் மேலதிக விசாரணைகளை மேற கொண்டுள்ளனர். (ஐ–12)



## மகிந்தவின் பாதுகாப்பு குறைப்பு

கொழும்பு, டிச. 12

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த 116 பொலிஸ் உத்தியோகத்தர்கள் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு அச்சுறுத்தல் மற்றம் தேவை மதிப்பீட்டின் அடிப்படையில் பதில் பொலிஸ் மா அதிபர் மேற்கொண்ட மீளாய்வைத் தொடர்ந்து முன்னாள் ஜனாதிபதிகளுக்கான பாதுகாவலர்களின் எண்ணிக்கை அறுபதாகக் குறைக்கப்பட்டதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புக்காக 67 பேரும், முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிக்கா மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோரின் பாதுகாப்புக்காக முறையே 58, 51 பேரும் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும், மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்த மூன்று வாகனங்கள் மீளப் பெறப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ–05)

# போராட்டத்தில் பொலீஸாரைத் தாக்கியது யார்? பல்வேறு கோணங்களில் விசாரணை ஆரம்பம்!

(கொழும்பு, டிச. 12)

பாடசாலைகளில் இணைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களை, ஆசிரிய சேவையினுள் நிரந்தரமாக உள்வாங்க வலியுறுத்தி கடந்த 02ஆம் திகதி, பத்தரமுல்லையில் அமைந்துள்ள கல்வி அமைச்சுக்கு முன்னால் இடம்பெற்ற போராட்டத்தின் போது, மூன்று பொலீஸ் அதிகாரிகள் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று பொலீஸ் தலைமையகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் நீதிமன்றத்தில் வாக்குமூலம் வழங்கிய பொலிஸ் அதிகாரி ஒருவர், இராணுவ புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்களாலேயே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவித்திருந்தமை தொடர்பில் உறுதிப்படுத்தப்படவில்லை என்றும், சம்பவம் தொடர்பில் தலங்கம பொலீஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், நீதிமன்றத்தில் ஆஜராகிய அதிகாரி அவ்வாறு தெரிவித்தாரா என்பது தொடர்பில் பதில் பொலிஸ் மா அதிபரின் உத்தரவின் பேரில் பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(ஜ-05)

# யாழ்ப்பாணத்தில் பரவும் எலிக்காய்சலால் 7 பேர் சாவு : 44 பேர் வைத்தியசாலையில்

## - மருத்துவர் கேதீஸ்வரன் விவரிப்பு -

யாழ்ப்பாணம், டிச. 12

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது பரவிவரும் ஒருவிதமான காய்ச்சல் காரணமாக இதுவரை ஏழு பேர் உயிரிழங்துள்ளனர், 44 பேர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள்பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில், "இந்தக் காய்ச்சல் காரணமாகப் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையிலும் யாழ் போதனா வைத்தியசாலயிலும் 32 பேர் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இதுவரை 7 இறப்புக்கள் ஏற்பட்டுள்ளன. நோயாளர்களிடமிருந்து கொழும்பு மருத்துவ ஆராய்ச்சிநிறுவனத்துக்கு அனுப்பப்பட்ட மாதிரிகளில் இருவருக்கு எலிக்காய்ச்சல் (லெப்ரோஸ்பிரோஸிஸ்) இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே தற்போது மேற்படி காய்ச்சலை எலிக்காய்ச்சலாக கருதி சிகிச்சைகளும் தடுப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இக் காய்ச்சல் தற்போது பரவிவரும் பருத்தித்துறை, கரவெட்டி, சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் ஒருநாள் காய்ச்சலாக இருந்தாலும் உடனடியாக அருகிலுள்ள அரச வைத்தியசாலையை நாடும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. இப்பிரதேசத்திலுள்ள வைத்தியசாலைகளில் இந்நோய்க்கு சிகிச்சை வழங்குவதற்கான மருந்துகள்வழங்கப்பட்டுள்ளன. இவ்விடயம் சம்பந்தமாக சுகாதார வைத்திய அதிகாரிகளால் ஒலிபெருக்கி மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது. மேலும் பிரதேச செயலாளர்களின் உதவியுடன் கிராமமட்ட உத்தியோகத்தர்கள் மூலமாக பொதுமக்களுக்கு இவ்விடயம் சம்பந்தமாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகின்றது.

எலிக்காய்ச்சல் நோய் ஏற்படக்கூடிய ஆபத்து இலக்கினர்களான விவசாயிகள், மீன்பிடித் தொழிலாளர்கள், துப்பரவுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு இந்நோய்க்கான தடுப்பு மருந்து வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. விவசாயத் திணைக்களத்தின் பிரதேசமட்ட உத்தியோகத்தர்களின்உதவியுடன்கிராமமட்டத்தில் விவசாயிகளுக்கு தடுப்பு மருந்துகளை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந் நோய்ப்பரம்பலை ஆய்வுசெய்து ஆலோசனை வழங்குவதற்காக மத்திய சுகாதார அமைச்சின் தொற்றுநோய்த் தடுப்பு பிரிவிலிருந்து வைத்திய நிபுணர்கள் குழுவொன்று யாழ்ப்பாண மாவட்டத்திற்கு வருகைதந்துள்ளது.

அவர்கள் வைத்தியசாலைகளிலும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளிலும் களத்திலும் ஆய்வுகளை மேற்கொண்டு உரிய ஆலோசனைகளை வழங்கவுள்ளனர். மேலும் இந்நோய்க்கு சிகிச்சை அளிப்பதற்கான ஒருதொகுதி மருந்துகள் சுகாதார அமைச்சின் மருத்துவ வழங்கல் பிரிவினால் யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்று உள்ளது.

(ஐ)

# ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியலுக்கு தடை!

(கொழும்பு, டிச. 12)

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் ஐக்கிய மக்கள் சக்திக்குக் கிடைத்துள்ள தேசியப் பட்டியல் ஆசனங்களின் விவரத்தைத் தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு அனுப்ப கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிததுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமினால் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாட்டினைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்ட கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்சிலின் செயலாளர் நிசாம் காரியப்பரின் பெயரை உள்ளடக்காமல் ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியலை அனுப்ப அனுமதிக்கக் கூடாது எனக் கோரி, ரவூப் ஹக்கீமினால் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விநாரணையின் போதே கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தினால் இந்த இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(ஜ-07)

# மர்மக் காய்ச்சல் எலிக் காய்ச்சலே!

## - ஆய்வக அறிக்கையில் நிரூபணம் -

(கொழும்பு, டிச. 12)

யாழ்ப்பாணத்தில் பரவிவரும் மர்மக் காய்ச்சலால் உயிரிழந்த 7 பேரிடம் எடுக்கப்பட்ட பல மாதிரிகளில் எலிக்காய்ச்சல் அல்லது லெப்டோஸ்பிரோசிஸ் வைரஸ் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக தொற்று நோயியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் இன்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட அதன் சமூக சுகாதார நிபுணர் துஷானி பெரேரா இதனைத் தெரிவித்தார். உயிரிழந்த 7 பேரின் மாதிரிகள் கொழும்பிலுள்ள தேசிய மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் கண்டி தேசிய வைத்தியசாலை ஆகியவற்றின் ஆய்வகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், ஆய்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். பல நோயாளிகளின் மாதிரிகள் எலிக்காய்ச்சல் என உறுதி செய்யப்பட்டுள்ளது. ஏனைய ஆய்வுப் பணிகள் இடம்பெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். நீண்ட நாள் காய்சல், கண் சிவத்தல், உடல் சோர்வு, கடும் மஞ்சள் நிறத்தில் சிறுநீர் வெளியேறுதல், சிறுநீருடன் இரத்தம் கசித்தல் என்பன எலிக்காய்ச்சல் நோய்க்கான அறிகுறிகளாகும். எனவே இந்த நோய் அறிகுறிகள் காணப்படுபவர்கள் உடனடியாக வைத்தியரை நாடுவது அவசியமாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ஜ-05)

# சபாநாயகருக்கு எதிராக ஐ.ம.ச நம்பிக்கையில்லாப் பிரேரணை!

*(கொழும்பு, டிச.12)*

*சபாநாயகர் அசோக சபுமல் ரன்வலவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவருவதற்குத் திட்டமிட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா குறிப்பிட்டுள்ளார்.*

*சபாநாயகரின் கலாநிதிப் பட்டம் குறித்து அண்மையில் எழுந்துள்ள சர்ச்சைகளுக்கு மத்தியில், தனது கல்வித் தகுதியின் நம்பகத்தன்மையைச் சபாநாயகர் தெளிவுபடுத்த வேண்டும் அல்லது அவர் தானானப் பதவியில் இருந்து விலக வேண்டும். அவற்றைச் செய்யத் தவறினால், அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வருவது பற்றி ஐக்கிய மக்கள் சக்தி ஆலோசித்து வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா மேலும் குறிப்பிட்டுள்ளார்.*

*சபாநாயகர் அசோக சபுமல் ரன்வலவின் கல்வித் தகுதி பற்றி, நாடாளுமன்றத்தின் இணையத் தளத்தில் வெளியிடப்பட்ட விடயங்கள் அண்மையில் நீக்கப்பட்டதை அடுத்து, சபாநாயகரின் கலாநிதி பட்டம் குறித்த சர்ச்சை நீடிக்கிறது. சபாநாயகரின் பெயருக்குப் பின்னால் குறிப்பிடப்பட்ட கலாநிதிப் பட்டத்தின் சட்டவலு குறித்து ஆராயப்பட வேண்டும் என்று சமூக ஊடகங்களில் பரவலாகப் பேசப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.*

*(ஜ-05)*







பிரான்ஸ் ஐரோப்பிய விவகாரங்கள் மற்றும் வெளி விவகார அமைச்சின் பொதுச் செயலாளர் ஆன் மேரி டெஸ்கோட்ஸ் தலைமையிலான பிரதிநிதிகள் குழு ஒன்று அண்மையில் இலங்கைக்கான சிநேக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டது. இந்தக் குழு, நேற்று இலங்கைப் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவை அவரது அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியது. இரு நாடுகளுக்கும் இடையிலான தொடர்புகளைப் பலப்படுத்துவது பற்றியும், ஒன்றிணைந்து பணியாற்றக் கூடிய துறைகள் பற்றியும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. (படங்கள் : பிரதமரின் ஊடகப் பிரிவு)

## யாழ். பல்கலையில்

# பால்நிலை சமத்துவம், ஒப்புரவு குறித்த இரண்டாவது சர்வதேச ஆய்வு மாநாடு !








(யாழ்ப்பாணம், டிச. 12)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பால்நிலை ஒப்புரவு மற்றும் சமத்துவத்துக்கான நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பால்நிலை ஒப்புரவு மற்றும் சமத்துவம் பற்றிய இரண்டாவது சர்வதேச ஆய்வு மாநாடு நேற்று புதன்கிழமை, பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது.

“பால்நிலையை முதன்மைப்படுத்துவதற்கான பல்துறைசார்ந்த மற்றும் ஒன்றிணைந்த முன்னோக்குகள்” என்ற தொனிப் பொருளுடன் இடம்பெற்ற இந்த “வியோமம்” சர்வதேச ஆய்வு மாநாடு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பால்நிலை ஒப்புரவு மற்றும் சமத்துவத்துக்கான நிலையப் பணிப்பாளரும், சந்தைப்படுத்தல் துறைத் தலைவருமான பேராசிரியர் எஸ்.சிவாணி தலைமையில், சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி டிலோஜினி சங்கரதாஸ் ஒருங்கிணைப்பில் நடைபெற்றது.

துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகவும், ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்தின் இலங்கைக்கான சிரேஷ்ட பால்நிலை ஆலோசகரும், ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞானங்கள் பீடாதிபதியுமான கலாநிதி மனோஜ் பெர்ணாண்டோ, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் வதிவிடப் பிரதிநிதி அசூசா குபோட்டா மற்றும் ஐக்கிய இராச்சியத்தில் அமைந்துள்ள தர்மம் நிலையத்தின் பணிப்பாளரும், சட்டவாளருமான நகுலேஸ்வரன் தர்மலிங்கம் ஆகியோர் திறவு உரையாளர்களாகக் கலந்து கொண்டனர்.

மாநாட்டுக்கு முன்னதாக, பால்நிலை மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலான கண்காட்சி ஒன்றும் திறந்து வைக்கப்பட்டது. இந்தக் கண்காட்சியில் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பால்நிலை வன்முறை குறித்த 56 உண்மைச்சம்பவங்கள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மிக முக்கிய அம்சமாக தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்ற மாற்றுத் திறனாளி மாணவர்களின் நடன நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆய்வு மாநாட்டுத் திறவுரைகளைத் தொடர்ந்து, ஆய்வுக் கட்டுரைகள், அனுபவப் பகிர்வுகள் மற்றும் செய்தி மடல் வெளியீடும் இடம்பெற்றதுடன், வடக்கு மாகாணத்தில் பால்நிலை சமத்துவத்தை முதன்மைப்படுத்துவதற்காகத் தம்மை அர்ப்பணித்துச் சேவையாற்றியவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாணத்தின் பல்வேறு மாவட்டங்களிலும், பால்நிலை மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபடும் சமூக மட்டப் பிரதிநிதிகள், பல்கலைக்கழகத்தின் பீடாதிபதிகள், அரசாங்க அலுவலர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# அடிப்படை வசதிகளை டிஜிற்றல் மயப்படுத்த பில் அன்ட் மெலிண்டா கேட்ஸ் உடன் பேச்சு!





(கொழும்பு, டிச. 12)

இலங்கையில் பொது அடிப்படை வசதிகள் மற்றும் விவசாய நடவடிக்கைகளை நவீன மயப்படுத்தும் நடவடிக்கைகள் பற்றி பில் அன்ட் மெலிண்டா கேட்ஸ் மன்றத்தின் பிரிதிநிதிகளுக்கும், பிரதமர் கலாநிதி ஹருணி அமரசூரியவுக்கும் இடையிலான சந்திப பொன்று இன்று காலை பிரதமர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

பில் அன்ட் மெலிண்டா கேட்ஸ் மன்றத்தின் இந்தியா மற்றும் தென்கிழக்காசியாவின் கொள்கை மற்றும் அரச தொடர்புகளுக்கான பிரதம பணிப்பாளர் ஹரி மேனன் தலைமையிலான குழுவினருக்கும், பிரதமர் தலைமையிலான குழுவினருக்கும் இடையிலான இந்தச் சந்திப்பின் போது, இலங்கையில் விசேடமாக “டிஜிட்டல் விவசாயம் “ மற்றும் “டிஜிட்டல் பொது அடிப்படை வசதிகள்” ஆகியவற்றின் மேம்பாடு குறித்து விளக்கமாகக் கலந்துரையாடப்பட்டதாகப் பிரதமரின் ஊடகப்பிரிவு அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு:

உலகளாவிய ரீதியில் சுகாதாரம் மற்றும் போஷாக்கு, விவசாயம், நகர்ப்புற சுகாதாரம், மற்றும் மகளிர் பொருளாதாரத்தை வலுவூட்டல் தொடர்பாக பில் அன்ட் மெலிண்டா கேட்ஸ் மன்றத்தின் செயற்பாடுகள் பற்றி பணிப்பாளர் ஹரி மேனன் இந்தச் சந்திப்பின் போது விளக்கமளித்தார். அத்துடன், டிஜிட்டல் விவசாயத் திட்டங்களுக்கான நிதிவசதிகள் மற்றும் பொது அடிப்படை வசதிகளை விருத்தி செய்வதற்கான தொழிநுட்ப ரீதியிலான ஒத்துழைப்பை வழங்குவது தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

டிஜிட்டல் மயப்படுத்தல் மற்றும் போஷாக்குக் குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கான விடயங்கள் குறித்தான இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகள் பற்றி பிரதமர் விளக்கமளித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் பில் அன்ட் மெலிண்டா கேட்ஸ் மன்றத்தின் உயர் அதிகாரிகள், பிரதமரின் செயலாளர் திரு பிரதீப் ஹபுதன்த்ரி, மேலதிக செயலாளர் மஹிந்த குணரத்ன, மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் ஐரோப்பிய மற்றும் வட அமெரிக்கப் பிரிவுக்கான துணைப் பணிப்பாளர் தனுஜ மீகஹவத்த ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-05)

# வழக்கை வாபஸ் பெற மறுத்த சிறுமியை கொன்று ஆற்றில் வீசிய கொடூரம்!



ஒடிசா மாநிலம் சுந்தர்கர் மாவட்டத்தை சேர்ந்த வாலிபர் குனுகிசான் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் அப்பகுதியை சேர்ந்த சிறுமி ஒருவரை பாலியல் பலாத்காரம் செய்துள்ளார்.

இதுகுறித்து பாதிக்கப்பட்ட சிறுமி தருதிஹி போலீஸ் நிலையத்தில் புகார் செய்தாதையடுத்து பொலிஸார் வழக்கு பதிவு செய்து குனுகிசானை கைது செய்து விளக்கமறியலில் வைத்தனர் .

விளக்கமறியலில் இருந்து குனுகிசான் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் ஜாமீனில் பிணையில் விடுவிக்கப்பட்டார் . அவர் வெளியே வந்த நாளில் இருந்து தனது மீது பாலியல் புகார் கொடுத்த சிறுமியை தேடி வந்த நிலையில் சிறுமி ஜார்சுகுடா நகரில் தனது அத்தை வீட்டில் தங்கி பியூட்டி பார்லரில் வேலை செய்து வந்தது தெரியவந்ததது.

இதனைத்தொடர்ந்து குனுகிசான் சிறுமியிடம் சென்று தனது மீது புகார் தெரிவித்துள்ள பாலியல் பலாத்கார வழக்கை வாபஸ் வாங்கும் படி கேட்டுக்கொண்டதாகவும் அதற்கு அந்த சிறுமி மறுத்து வந்ததாகவும் கூறப்படுகிறது.

இதனால் ஆத்திரமடைந்த குனுகிசான் சிறுமியை கொலை செய்ய திட்டமிட்டுள்ளார். சிறுமி வேலைக்கு சென்று வரும் நேரத்தை கண்காணித்து கடந்த 7-ந் தேதி மற்றொரு வாலிபருடன் சேர்ந்து சிறுமியை கடத்தினார். அவர்கள் மோட்டார் சைக்கிளில் சிறுமியை கடத்தி சென்று ரூர்கேலா மற்றும் தியோகரை இணைக்கும் சாலை பகுதிக்கு சிறுமியை கொண்டு சென்றுள்ளனர் . அங்கு வைத்து கத்தியால் சிறுமியின் தலையை துண்டித்து கொலை செய்து பின்னர் அவரது உடல் பாகங்களை துண்டு துண்டாக வெட்டி பிராமணி ஆற்றில் தர்கேரா நாலில் மற்றும் பலுகாட் பகுதியில் வீசினர்.

இந்த நிலையில் சிறுமியை காணவில்லை என்று அவரது உறவினர்கள் கடந்த 7-ந் தேதி ஜார்சுகுடா போலீசில் புகார் செய்ததையடுத்து பொலிஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

அந்த பகுதியில் உள்ள சி.சி.டி.வி. கேமரா காட்சிகளை ஆய்வு செய்த போது சிறுமியை மோட்டார் சைக்கிளில் 2 வாலிபர்கள் கடத்தி சென்றது தெரியவந்தது. 2 வாலிபர்களுக்கு மத்தியில் சிறுமி இருந்தார். 2 வாலிபர்களும் முகக்கவசம் அணிந்திருந்ததால் அவர்கள் குறித்த அடையாளம் உடனடியாக தெரியவில்லை.

இதுகுறித்து பொலிஸார் விசாரணை நடத்தியதில் சிறுமியை கடத்திய வாலிபர் குனுகிசான் என்பது தெரியவந்தது. இதையடுத்து பொலிஸார் ஏ.ஐ.தொழில்நுட்பத்தை பயன்படுத்தி குனுகிசானை மடக்கி பிடித்து விசாரணை நடத்திய போது சிறுமியை கடத்தி கொலை செய்து உடல் பாகங்களை ஆற்றில் வீசியதாக தெரிவித்தார்.

இதையடுத்து பொலிஸார் குனுகிசானை கைது செய்து பிராமணி ஆற்றில் சிறுமியின் உடல் பாகங்களை தேடி வருகின்றனர். இந்த சம்பவம் ஒடிசாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நாடாளுமன்றத்தில் இன்றும் தொடர்ந்த எதிர்கட்சி எம்.பி.க்கள் போராட்டம்!




இந்த நிலையில் அதானி ஊழல் விவகாரம் தொடர்பாக நாடாளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் இன்றும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி உள்ளிட்ட காங்கிரஸ், தி.மு.க. இடதுசாரி எம்.பி.க்கள் இதில் கலந்து கொண்டனர். அவர்கள் கைகளில் பதாகைகள் வைத்து கோஷங்களையும் எழுப்பினார்கள்.

மோடி, அதானிக்கு உள்ள தொடர்பை கூறி கோஷங்களை எழுப்பினார்கள். ஜே.பி.சி. விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்றும் கோஷமிட்டனர்.

நாடாளுமன்ற மேல் சபையில் இன்றும் பல்வேறு பிரச்சனைகளுக்காக அமளி நிலவியது.

மேல்சபை கூடியதும் பா.ஜ.க. உறுப்பினர்கள் ஜார்ஜ் சோரஸ்-காங்கிரஸ் தலைமைக்கு இடையே உள்ள பிரச்சனையை கிளப்பினார்கள். இதற்கு காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆட்சேபம் தெரிவித்தனர். அவர்கள் மேல்சபை தலைவரும், துணை ஜனாதிபதியுமான ஜெகதீப் தன்கரை விமர்சித்தனர்.

இது தொடர்பாக கடும் அமளி நிலவியதையடுத்து அமைச்சரவை பிற்பகல் 2 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சூரிய மின்சாரம் விநியோகம் தொடர்பான முதலீடுகளை பெற இந்திய அதிகாரிகளுக்கு இலஞ்சம் கொடுத்ததாகவும், முதலீட்டாளர்களை ஏமாற்றி மோசடி செய்ததாகவும் அதானி குழுமம் மீது அமெரிக்காவில் வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

இந்நிலையில் அதானி விவகாரம் தொடர்பாக நாடாளுமன்ற கூட்டுக்குழு (ஜே. பி.சி.) விசாரணை நடத்த வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்து வருகின்றன.

இந்த பிரச்சினையை நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் விவாதித்து வருகிறார்கள். குறித்த இந்த விவகாரம் தொடர்பாக எதிர்க்கட்சி எம்.பி.க்கள் நாடாளுமன்ற வளாகத்தில் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.



# ஆழ்துளை கிணற்றில் விழுந்த 5 வயது சிறுவன் உயிரிழப்பு!

ராஜஸ்தான் மாநிலத்தை அடுத்த கலிகாட் என்ற கிராமத்தில் கடந்த 9-ந்தேதி (திங்கள் கிழமை) பிற்பகல் 3 மணி அளவில் விளையாடி கொண்டிருந்த ஐந்து வயது சிறுவன் 150 அடி ஆழம் கொண்ட ஆழ்துளை கிணற்றில் தவறி விழுந்தான். ஆழ்துளை கிணற்றில் விழுந்த சிறுவன் ஆர்யனை மீட்பது தொடர்பாக அந்த கிராமத்தை சேர்ந்த மக்கள் பொலிஸாருக்கு தகவல் தெரிவித்தனர்.

இதைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த பொலிஸார் மற்றும் தேசிய பேரிடர் மீட்புக் குழுவினர் சிறுவனை மீட்கும் பணிகளை தொடங்கினர். சிறுவனை மீட்க அதிக நேரம் தேவைப்பட்டதால் , முதலில் 150 அடி ஆழத்தில் இருந்த சிறுவன் சுவாசிக்க ஏதுவாக ஒட்சிசன் குழாயை அனுப்பி வைத்தனர். இதைத் தொடர்ந்து சிறுவனை கண்காணிக்க கேமராக்களை இறக்கினர்.

சிறுவனை கேமரா மூலம் கண்காணித்துக் கொண்டே கிணற்றில் துளையிடும் இயந்திரங்களை பயன்படுத்தி குழிகள் தோண்டப்பட்டது. இதனையடுத்து வீரர்கள் கிணற்றுக்குள் இறங்கி சிறுவனை மீட்க கிட்டத்தட்ட 55 மணி நேரங்கள் கடந்த நிலையில் மீட்கப்பட்ட போது சிறுவனுக்கு சுயநினைவு இருக்கவில்லை. மருத்துவமனை அழைத்து செல்லப்பட்ட போதிலும், சிகிச்சை பலனின்றி சிறுவன் உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பெரியார் நினைவகத்தை திறந்து வைத்த தமிழக முதல்வர் மு .க . ஸ்டாலின்!



கேரள மாநிலம் கோட்டயத்தில் ஷரூ.8.5 கோடியில் புனரமைக் கப்பட்ட தந்தை பெரியார் நினைவகம் மற்றும் நுாலகத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். இந்த திறப்பு விழாவுக்கு அம்மாநில முதல்-மந்திரி பினராயி விஜயன் தலைமை தாங்கினார்.

விழாவில் திராவிட கழக தலைவர் கி.வீரமணி, அமைச்சர்கள் துரைமுருகன், எ.வ.வேலு, மு.பெ.சாமிநாதன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். சமூக நீதி வரலாற்றின் முதல் வெற்றி விழா நகரமான வைக்கம் நகரில் தமிழகம், கேரள அரசு இணைந்து கொண்டாடுவது சிறப்பு என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

# ரயில்வே சட்டத்திருத்த மசோதா தொடர்பில் மக்களவையில் நிறைவேற்றம்!




மக்களவையில் நடைபெற்று வரும் குளிர்கால கூட்டத்தொடரில் ரயில்வே சட்டத்திருத்த மசோதா நிறைவேற்றப்பட்டது.

கடந்த கூட்டத்தொடரில் ரயில்வே சட்டத்திருத்த மசோதா தாக்கல் செய்யப்பட்டது. இந்த மசோதா ரயில்வே வாரியத்தின் செயல்பாட்டை மேம்படுத்தவும், அந்த வாரியம் சுதந்திரமாக இயங்கவும் வழி செய்யும் என்று மத்திய அரசு தெரிவித்தது.

குறித்த மசோதா மீது அவையில் விவாதம் நடைபெற்ற நிலையில் அப்போது கேள்விகளுக்கு பதில் அளித்த ரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், சட்டத்திருத்த மசோதா ரெயில்வே துறையை தனியார் மயமாக்க வழி செய்யும் என்று எதிர்க்கட்சிகள் பொய் கதையை தெரிவித்தனர் என்றார்.

இதனைத் தொடர்ந்து பேசிய அவர், அரசமைப்பு சட்டம் குறித்த எதிர்க்கட்சியின் பொய்கதை தோல்வி அடைந்த நிலையில், இந்த மசோதா குறித்த அக்கட்சிகளின் பொய் எந்த விளைவையும் ஏற்படுத்தாது என்று தெரிவித்தார்.

இதைத்தொடர்ந்து ரயில்வே சட்டத்திருத்த மசோதா குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது.



போதைப் பொருட்கள் உடல் உறுப்புகளை நேரடியாக பாதிக்கின்றன. இதனால் இதயம், மூளை, கல்லீரல் போன்ற முக்கிய உறுப்புகள் செயலிழக்கின்றன. தொடர்ந்து போதைப் பொருட்களை உள்வாங்குவதால் பல மரணங்கள் ஏற்படுகின்றன.
போதை வாழ்க்கை மன அழுத்தம், பயம், மனஅமைதி இழப்பு போன்ற மனநலக் கோளாறுகளை ஏற்படுத்துகிறது. இது நினைவாற்றலைக் குறைக்கவும் சிந்தனைத் திறனைப் பாதிக்கவும் செய்கிறது.

# போதைப் பழக்கம்: சமூகத்தின் சாத்தான்!

போதைப் பழக்கத்துக்கு சிறியவர், பெரியவர் பாகுபாடில்லை. யாரை வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் வசியப்படுத்திவிடும் ஆற்றல் இதற்கு உண்டு. இதன்பால் ஈர்க்கப்படுபவர்களின் உடல்நலனையும், வாழ்க்கையையும், மகிழ்ச்சியையும் தொலைத்துக் கட்டிவிடும். அதோடு பலரை கடனாளியாக மாற்றி தெருவிலும், நோயாளியாக மாற்றி மருத்துவமனையிலும் அலையவைத்துவிடும். இந்தப் பழக்கம் அதிகமானால் உயிருக்குக்கூட உத்தரவாதமில்லை. போதைப் பழக்கம் இன்றைக்குப் பெருகிவிட்டதற்கு மதுக்கடைகளுக்கு முன்னே நிற்கும் நீண்ட வரிசையும், தெருமுனைக் கடைகளில் சிகரெட்டும் கையுமாக நிற்கும் மனிதர்களுமே சாட்சி.

போதை மற்றும் அதனுடன் தொடர்புடைய செயற்பாடுகள், மனித வாழ்க்கையின் பல்வேறு மூலதனங்களை அழித்து, சமூக அமைப்புகளைப் பாதிக்கின்றன. போதை என்பது விஷப்பொருட்கள், போதைப்பொருட்கள் அல்லது உடலுக்கு தீங்கு செய்யக்கூடிய வேதிப்பொருட்களை உள்வாங்குவதன் மூலம் மனதுக்கும் உடலுக்கும் ஏற்படும் நாசமாகும். இவை தனிநபர் மட்டுமல்லாது, குடும்பங்கள், சமூகங்கள் மற்றும் நாடுகளின் பொருளாதாரத்துக்கும் தீவிரமான பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன.



போதை வாழ்க்கை, பலருக்கும் அறியாமையால், உற்சாகத்தைக் காண்கின்ற முயற்சியால் அல்லது மனஅழுத்தத்தை சமாளிக்க நம்பிக்கை இழந்த நிலையில் தொடங்குகிறது. முதலில், மகிழ்ச்சி அல்லது மன அமைதி தரும் பொருளாகக் கருதப்படும் போதைப்பொருட்கள், பின்னர் ஒரு உடன்பிறப்பாக மாறி, மனிதனை முழுமையாகக் கட்டுப்படுத்துகின்றன.

போதைப்பொருட்கள் பெரும்பாலும் பல்வேறு வகையான நேர்மறை உணர்வுகளைத் தரும் என கூறப்படுகிறது. ஆனால், இது முற்றிலும் தவறான புரிதல். இவை சில நேரங்களில் உடலின் நேரடித் தேவைகளைக் கட்டுப்படுத்தி மனதிற்கு தனித்துவ உணர்வுகளை ஏற்படுத்தினாலும், அதன் பின்விளைவுகள் மிகவும் தீவிரமானவை.

போதைப் பொருட்கள் உடல் உறுப்புகளை நேரடியாக பாதிக்கின்றன. இதனால் இதயம், மூளை, கல்லீரல் போன்ற முக்கிய உறுப்புகள் செயலிழக்கின்றன. தொடர்ந்து போதைப் பொருட்களை உள்வாங்குவதால் பல மரணங்கள் ஏற்படுகின்றன.

போதை வாழ்க்கை மன அழுத்தம், பயம், மனஅமைதி இழப்பு போன்ற மனநலக் கோளாறுகளை ஏற்படுத்துகிறது. இது நினைவாற்றலைக் குறைக்கவும் சிந்தனைத் திறனைப் பாதிக்கவும் செய்கிறது.

போதைப் பழக்கம் கொண்ட நபர்கள் சமூகத்தில் தனிமைப்படுத்தப்படுகிறார்கள். குடும்ப உறவுகள், நண்பர்கள் மற்றும் வேலை வாய்ப்புகளில் பாதிப்புகள் ஏற்படுகின்றன. போதைப் பொருட்களுக்கு பணம் தேவைப்படுவதால், சிலர் திருட்டு, கொள்ளை, சூது, போன்ற சட்ட விரோத செயல்களில் ஈடுபடுகின்றனர்.

குடும்பப் பிரச்சனைகள், காதல் தோல்விகள், வேலைப் பளு போன்ற காரணங்களால் மன அழுத்தம் ஏற்படுகிறது. இதை தவிர்க்க தவறான வழிகளைத் தேர்ந்தெடுப்பார்கள்.

புதிய உணர்வுகளை அனுபவிக்க ஆர்வம் மிகுந்தவர்கள் இதை முயற்சிக்கிறார்கள். சில மருந்துகள் தவறாகப் பயன்படுத்தப்படுவதால் போதையில் ஈடுபட முடிகிறது

போதைப் பொருட்கள் பற்றிய விளைவுகளை மக்கள் மனதில் பதியச் செய்வது மிக முக்கியம். பள்ளிகள், கல்லூ ரிகள், ஊடகங்கள் மூலம் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்த வேண்டும்.

போதை வாழ்கை தொடங்கியவர்களுக்கு மனநல ஆலோசனைகள் மிக முக்கியம். மன அழுத்தத்தை சரியாக சமாளிக்க அறிவுறுத்தல் வழங்க வேண்டும்.

போதைப் பழக்கத்திலிருந்து விடுபட சிறப்பு மருத்துவமனைகள் தேவை. இதன் மூலம் சிகிச்சை பெற்றவர்களுக்கு வழிகாட்டுதல் வழங்க முடியும்.

போதைப் பழக்கத்திலிருந்து விடுபட குடும்பம் மற்றும் நண்பர்கள் தரும் ஆதரவு பெரிதும் உதவும். போதை வாழ்க்கையை முற்றிலும் தவிர்க்க, தன்னம்பிக்கையை வளர்க்க வேண்டும்.

ஒவ்வொரு நபரும் தமது இலக்குகளை நிறைவேற்ற தன்னம்பிக்கையை அதிகரிக்க வேண்டும்.


உடனிருக்கும் நண்பர்கள் தவறான பாதையில் செல்கிறார்கள் என்றால் அவர்களை அப்புறப்படுத்துவது அவசியம்.

தினசரி உடற்பயிற்சி மற்றும் ஆரோக்கியமான உணவுகளை கடைப்பிடிப்பது மன நலத்தையும் உடல் நலத்தையும் மேம்படுத்தும்.

பொழுதுபோக்கான வேலைகள் மற்றும் திறன்களை வளர்க்கும் செயல்களில் ஈடுபடுதல், போதை வாழ்க்கையைத் தடுக்க உதவும்.

போதை வாழ்க்கை ஒருவனை மட்டுமல்லாமல் சமூகத்தையும் அழிக்கும் ஒரு பெரும் பாதிப்பாகும். இதனை தடுக்க ஒவ்வொருவரும் முயற்சிக்க வேண்டும். குறிப்பாக இளைய தலைமுறையின் மனநிலையில் மாற்றம் கொண்டு வர வேண்டும். விழிப்புணர்வும், உரிய நடவடிக்கைகளும் இன்றியமையாதவை.

ஒரு நல்ல வாழ்க்கையை உருவாக்க தன்னடக்கமும், தன்னம்பிக்கையும் அவசியம். எந்த நிலைகளிலும் போதை வாழ்க்கையைத் தவிர்க்க துடிப்புடன் செயல்படுவோம். நம் வாழ்வை நாமே பாதுகாத்துக் கொள்ள முன்வருவோம்.



# தென் கொரிய அதிபர் பதவி விலக மறுப்பு: பாராளுமன்ற தீர்மானம் மூலம் நீக்க முடிவு?

தென்கொரியாவில் கடந்த 3-ந்தேதி அதிபர் யூன் சுக் இயோல் திடீரென ராணுவ அவசர நிலையை பிரகடனப்படுத்தினார். மக்களின் கடும் எதிர்ப்பால் அவசர நிலையைத் திரும்பப் பெற்றார்.

இதனைத்தொடர்ந்து நாட்டு மக்களிடம் மன்னிப்பு கேட்டார். ஆனால் யூன் சுக் இயோல் பதவி விலக வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன.

அவருக்கு எதிரான தீர்மானத்தை பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் கொண்டு வந்தன எனினும் ஆளும் கட்சி புறக்கணித்ததால் தீர்மானம் தோல்வி அடைந்தது. இதற்கிடையே புதிய தீர்மானத்தை எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சி கொண்டு வந்துள்ளது.

இந்த மசோதா மீதான வாக்கெடுப்பை சனிக்கிழமை நடத்த எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன. மேலும் அவர் பதவி விலக வேண்டும் என்று ஆளும் கட்சியே விரும்புகிறது.

இந்த நிலையில் அதிபர் யூன் சுக் இயோல் தொலைக் காட்சியில் பேசும்போது தெரிவித்ததாவது

நான் அறிவித்த ராணுவ அவசர நிலை ஆணை என்பது ஆளுகைச் செயலை சார்ந்தது.



இது விசாரணைகளுக்கு உட்பட்டது அல்ல. கிளர்ச்சிக்கு உட்பட்டது அல்ல. என் மீதான கிளர்ச்சி குற்றச்சாட்டுகளை மறுக்கிறேன். எனக்கு ராஜினாமா செய்யும் எண்ணம் இல்லை. நாட்டின் அரசாங்கத்தை முடக்குவதற்கும், அரசியலமைப்பு ஒழுங்கை சீர்குலைப்பதற்கும் காரணமான சக்திகள் மற்றும் குற்றக் குழுக்களை கொரியா குடியரசின் எதிர்காலத்தை அச்சுறுத்துவதைத் தடுக்க நான் இறுதிவரை போராடுவேன்.

எனது ராணுவ அவசர நிலை சட்டம் என்பது எதிர்க்கட்சியிடம் இருந்து ஜனநாயகம் மற்றும் அரசியலமைப்பு ஒழுங்கை பாதுகாப்பதற்காக கொண்டு வரப்பட்டது. இவ்வாறு அவர் கூறினார்.

இதற்கிடையே ஆளும் கட்சியின் தலைவர் ஹான் டோங்-ஹூன் கூறும் போது, பதவி நீக்கத்துக்கு பதிலாக யூன் சுக் இயோல் பதவியை ராஜினாமா செய்வார் என்று எதிர்பார்த்தோம். ஆனால் அவரை சம்மதிக்க வைக்கும் முயற்சியில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

தற்போது ஜனநாயகத்தையும் குடியரசையும் பாதுகாக்க, பதவி நீக்கம் மூலம் அதிபரை வெளியேற்றுவது தான் ஒரே வழியாக உள்ளது என்றார்.

இதனால் பாராளுமன்ற வாக்கெடுப்பு மூலம் அதிபர் பதவி நீக்கம் செய்யப்படலாம்.

## காசா முனையில் இஸ்ரேலின் தாக்குதலால் குழந்தை உட்பட 33 பேர் பரிதாப உயிரிழப்பு!



காசா முனையில் இஸ்ரேல் தொடர் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்நிலையில் , வடக்கில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் தங்கியிருந்த வீட்டில் நேற்றிரவு இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 33 பேர் உயிரிழந்ததாக பாலஸ்தீன சுதகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதில் பெரும்பாலானோர் குழந்தைகள் என்பது குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேல் மற்றும் லெபனான் ஹிஸ்புல்லா இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் எட்டிய நிலையிலும், இஸ்ரேல் ஹமாஸ் இடையிலான போர் முடிவுக்கு வரவில்லை. தற்போதைய அமெரிக்க அரசு மற்றும் புதிதாக ஆட்சி அமைக்க இருக்கும் அமெரிக்க நிர்வாகங்கள் அடுத்த ஆண்டு ஜனவரியில் புதிய அமெரிக்க அதிபர் பதவியேற்கும் முன் போரை முடிவுக்கு கொண்டுவர நம்பிக்கை தெரிவித்துள்ளன.

எனினும், இது தொடர்பான போர் நிறுத்த பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து முடங்கி வருகின்றன. சமீபத்திய தாக்குதலை மருத்துவமனையின் அருகாமையில் இருந்த ஹமாஸ் அமைப்பினரை குறிவைத்து நடத்தியதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

மேலும் இராணுவம் பொதுமக்களுக்கு தீங்கு விளைவிப்பதைத் தவிர்க்க முயற்சிப்பதாகவும் ஹமாஸ் அமைப்பினர் மக்கள் மத்தியில் மறைந்திருப்பதாக குற்றம் சாட்டுகிறது. இதனால் அவர்களின் உயிருக்கு ஆபத்து உள்ளது.

## ஆப்கானிஸ்தானில் வெடித்த குண்டு: தலிபான் அகதிகள் இலாகா மந்திரி உயிரிழப்பு



ஆப்கானிஸ்தான் தலைநகர் காபுலில் நடத்தப்பட்ட தற்கொலைப்படை தாக்குதலில், அந்நாட்டின் தலிபான் அகதிகள் இலாகா மந்திரி மற்றும் இருவர் கொல்லப்பட்டனர்.

தலிபான் ஆப்கானிஸ்தானில் கடந்த மூன்று வருடத்திற்கு முன் ஆட்சியை பிடித்தது. இந்நிலையில் தலிபான் வட்டாரத்தில் உள்ள தலைவர் மீது நடைபெற்ற மிகப்பெரிய தற்கொலைப்படை தாக்குதல் இதுவாகும்.

அகதிகள் அமைச்சக வளாகத்திற்குள் நடைபெற்ற தாக்குதலில் மந்திரி கலில் ஹக்கானி கொல்லப்பட்டார். இவர் உள்துறை பொறுப்பு மந்திரி சிராஜ்/தீன் ஹக்கானி மாமனார் ஆவார். சிராஜ்/தீன் ஹக்கானி தலிபானுக்கிடையில் அதிகாரமிக்க தலைவராக உள்ளார். தலிபான் பதவி ஏற்ற பிறகு அமைச்சரவையில் உள்ள ஒரு தலைவர் கொல்லப்படுவது இதுதான் முதல்முறையாகும். குண்டு வெடிப்புக்கு எந்த அமைப்பும் இதுவரை பொறுப்பு ஏற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## உலக பணக்கார பட்டியலில் எலான் மஸ்க் சாதனை:

## ரூ.37 லட்சம் கோடியை தாண்டி சொத்து மதிப்பு!



உலக பணக்காரரான எலான் மஸ்க் புதிய சாதனையை படைத்துள்ளார். டெஸ்லா, ஸ்பெஸ்எக்ஸ் மற்றும் எக்ஸ் சமூக வலை தளம் ஆகியவற்றின் உரிமையாளரான அவரது சொத்து மதிப்பு சமீபகாலமாக ஏற்றமடைந்து வருகிறது.

இந்நிலையில் அமெரிக்க அதிபர் தேர்தலில் டிரம்புக்கு எலான் மஸ்க் ஆதரவு அளித்தார். டிரம்ப் வெற்றி பெற்றதும் எலான் மஸ்க்கின் டெஸ்லா நிறுவன பங்குகள் 65 சதவீதம் விலை உயர்ந்துள்ளது.

அதேபோல் அவரது மற்ற நிறுவன பங்குகளும் விலை அதிகரித்தது. இதனால் எலான் மஸ்க் சொத்து மதிப்பு உயர்ந்துள்ளது.

இந்த நிலையில் உலக பணக்காரர்கள் பட்டியலில் நிகர சொத்து மதிப்பு 400 பில்லியன் அமெரிக்க டாலர்களை தாண்டிய முதல் நபர் என்ற வரலாற்று சாதனையை எலான் மஸ்க் படைத்துள்ளார்.

ப்ளூம் பெர்க் பில்லியனர்கள் பட்டியலில் எலான் மஸ்க்கின் சொத்து மதிப்பு 447 பில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டியுள்ளது அதாவது இந்திய மதிப்பில் ஷரூ.37 லட்சம் கோடி ஷரூபாவாகும்.

ஸ்பெஸ்எக்ஸ் நிறுவ னத்தின் முதலீட்டாளர்கள் 1.25 மில்லியன் டாலர் மதிப்பிலான பங்குகளை வாங்க ஒப்புக்கொண்டனர். இதையடுத்து எலான் மஸ்க்கின் தனிப்பட்ட சொத்தின் மதிப்பு 50 பில்லியன் டாலர் உயர்ந்து 440 பில்லியன் டாலராக அதிகரித்தது.

இதனைத்தொடர்ந்து ஒரு ஒப்பந்தம் காரணமாக ஸ்பேஸ் எக்ஸ் நிறுவன மதிப்பு சுமார் 350 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளது. இதனால் எலான்மஸ்க்குக்கு கிட்டத்தட்ட 20 பில்லியன் டாலர் சொத்து மதிப்பு உயர்ந்துள்ளது என்று ப்ளூம்பெர்க் தெரிவித்தது.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்து மஸ்க் தனது நிகர மதிப்பில் 218 பில்லியன் அமெரிக்க டாலர்களை சேர்த்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கூரைமேல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணம் - சுன்னாகம் வாரியப்புலம் பகுதியைச்சேர்ந்த மின் பாவனையாளர் ஒருவர் 2023 ஆண்டு விண்ணப்பித்த போது, அவருக்கு அனுமதி வழங்காமல், 2024 ஆம் ஆண்டு விண்ணப்பித்த அதே இடத்தைச் சேர்ந்த மற்றொருவருக்குச் செல்வாக்கின் அடிப்படையில் பூர்த்தி செய்யப்படாத கட்டடத்துக்கு அனுமதி வழங்கியமை தொடர்பாகச் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து, அவருக்கு அனுமதியை வழங்குமாறு பணிக்கப்பட்ட பின்னரும், இணைப்புக்காக ஷரூபா 11 இலட்சம் செலுத்துமாறு கோரியமையை ஆதாரங்களுடன் மேன்முறையீடு செய்ததை அடுத்தே இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, யாழ்ப்பாணம் பிராந்திய மின் பொறியியலாளருக்கு இவ்வாறு பணித்திருக்கிறது.

சுன்னாகத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் பிராந்திய மின் பொறியியலாளர் அலுவலகத்தில் சோலர் அனுமதி பெறுவதற்காக விண்ணப்பிப்பவர்களில் பலருக்கு அனுமதி வழங்கப்படாமை, அனுமதி வழங்கப்பட்டவர்களுக்கு மீற்றர்பொருத்துவதில்பாரபட்சம் காட்டுதல் போன்ற முறைகேடுகள் குறித்து இலங்கை மின்சார சபையின் தலைமை அலுவலகத்துக்கும், மின் சக்தி வலு அமைச்சுக்கும், இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கும் இது வரை பல முறைப்பாடுகள் கிடைத்திருந்தன.

எனினும், இலங்கை மின்சார சபை அவற்றைக் கண்டும் காணாமல், முறையற்ற விதத்தில் பல அனுமதிகள் வழங்கப்பட்டமை தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தின் கவனத்தக்குக் கொண்டு வரப்பட்டதையடுத்து பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக அனுமதியை வழங்குமாறு உத்தரவிடப்பட்ட போதும், பிராந்திய மின் பொறியியலாளர் அவை குறித்துக் கிஞ்சித்தும் கவனமெடுக்காமல் தொடர்ந்தும் முறையற்ற விதத்தில் சோலர் அனுமதிகளை வழங்கி வந்துள்ளார்.

அதைவிட, அனுமதி வழங்கப்பட்டவர்களுக்கு மீற்றர்களைப் பொருத்துவதிலும் முறைகேடாக நடந்து கொண்டுள்ளார் என்று பாவனையாளர்கள் பலர் முறைப்பாடு செய்துமிருந்தனர்.

இதேநேரம் - இணைப்புக்கான அனுமதி வழங்கல் தொடர்பில் சுயாதீன விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என்று மின்வலுசக்தி அமைச்சரிடம் நேற்று நேரடியாகவும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில், அனுமதிக்கு விண்ணப்பித்த ஒழுங்கு, அனுமதிக்காகப் பணம் செலுத்திய ஒழுங்கு, அனுமதி வழங்கப்பட்ட ஒழுங்கு உட்பட முறைகேடுகள் நடந்துள்ளன என்பதை உறுதிப்படுத்தக் கூடிய தகவல்களை இலங்கை மின்சார சபையிடமிருந்து தகவல் அறியும் சட்டத்தின் ஊடாக வாடிக்கையாளர்கள் பலர் கேட்டிருந்த போதிலும், இது வரை அத்தகைய தகவல்கள் எவையும் வழங்கப்படவில்லை என்பதுவும் குறிப்பிடத்தக்கதாகும். (ஐ)

## எலிக்காய்ச்சல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதேநேரம், கடந்த இருவாரங்களுக்குள் மர்மக் காய்ச்சல் காரணமாக உயிரிந்த ஏழு பேரிடமிருந்தும் பெறப்பட்ட குருதி மாதிரிக ளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு களில் இருந்து இது எலிக்காய்சல் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# வருமான வரி குறித்து அறிவிப்பு

(கொழும்பு, டிச. 12)

கடந்த நவம்பர் மாதத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட வரிக் கொடுப்பனவுகளை டிசம்பர் 15 அல்லது அதற்கு முன்னர் செலுத்துமாறு உள்நாட்டு இறைவரித் திணைக்களம் பொதுமக்களை வலியுறுத்தியுள்ளது.

குறித்த வரி செலுத்துதலில் முன்கூட்டிய வருமான வரி (யுஜவு), நிறுத்தி வைக்கும் வரி மற்றும் முன்கூட்டிய தனிநபர் வருமான வரி ஆகியவை அடங்கும்.

எனவே, ஒன்லைன் வரி செலுத்தும் தளம் மூலம் உரிய வரிகளை செலுத்துமாறு பொதுமக்கள் வலியுறுத்தப்படுவதாக இறைவரித் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், வரிகளை செலுத்தாததற்கு அல்லது தாமதமாக செலுத்துவதற்கு விதிக்கப்படும் வட்டி மற்றும் அபராதம் எந்த சூழ்நிலையிலும் தள்ளுபடி செய்யப்படாது அல்லது குறைக்கப்படாது என்றும் உள்நாட்டு இறைவரித்திணைக்களம்தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அசாத் சாலி கைது தொடர்பில் நீதிமன்றம் வழங்கிய உத்தரவு

(கொழும்பு, டிச. 12)

முன்னாள் மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி கைது செய்யப்பட்டமை சட்டவிரோதமானது என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இதற்கு நட்ட ஈடாக 75,000 ஷரூபா பணத்தை பிரதிவாதிகள் செலுத்த வேண்டும் எனவும் நீதிமன்றம் இன்று உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர மற்றும் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் பணிப்பாளர் ஆகியோர் இந்த வழக்கின் பிரதிவாதிகள் ஆவர். 2021 மார்ச் 9 அன்று செய்தியாளர் சந்திப்பில் மதங்களுக்கு இடையே முருகலை ஏற்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் அசாத் சாலி 2021 மார்ச் 16 அன்று கைது செய்யப்பட்டார்.

ஒன்பது மாதங்களின் பின்னர் கொழும்பு உயர் நீதிமன்றத்தினால் 2021 டிசம்பர் 2 அன்று அவர் அனைத்து குற்றச்சாட்டுகளிலிருந்தும் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# விவசாயிகள் மற்றும் பண்ணையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு










(கொழும்பு, டிச. 12)

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் மாகாணத்தின் சிறந்த விவசாயிகள் மற்றும் சிறந்த பண்ணையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெற்றது.

வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் சுகந்தினி செந்தில்குமரன் தலைமையில் இன்று (12.12.2024) நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகம் கலந்து கொண்டார்.

இதன்போது, ஐந்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய சிறந்த விவசாயிகள் மற்றும் பண்ணையாளர்கள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

குறித்த நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர், விவசாய அமைச்சிற்கு கீழுள்ள திணைக்களங்களின் பணிப்பாளர்கள், யாழ். பல்கலைக்கழக விவசாய பீட பீடாதிபதி பேராசிரியர் க.பகீரதன், விவசாயிகள் மற்றும் விவசாய உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

அத்துடன், இதன்போது வடக்கு மாகாண விவசாய அமைச்சின் அறுவடை இதழும் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது. (ஐ)

# தேங்காய் எண்ணெயின் விலை அதிகரிப்பு

(கொழும்பு, டிச. 12)

இறக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெயின் விலை அதிகரித்துள்ளது. அதற்கமைய, ஒரு லீற்றர் தேங்காய் எண்ணெய் 800 ஷரூபாவாக புதிய விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சந்தையில் இன்று தேங்காய் விலை உயர்வினால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

தேங்காயின் விலை அதிகரிப்பு காரணமாக உள்ளூர் தேங்காய் எண்ணெய் உற்பத்தி நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் தற்போது சந்தையில் தேங்காய் ஒன்று 150 - 200 ரூபாவிற்கு இடைப்பட்ட விலையில் விற்பனை செய்யப்படுகிறது. சந்தையில் தேங்காய்களை கொள்வனவு செய்து எண்ணெய்எடுப்பதன் மூலம்எவ்வித இலாபமும் அடைய முடியாது என அகில இலங்கை பாரம்பரிய தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர் சங்கத்தின் பிரதம அழைப்பாளர் புத்திக டி சில்வா சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)



# கடற்றொழிலில் ஈடுபட்டவர் மரணம்

(கிளிநொச்சி, டிச. 12)

கிளிநொச்சியில் ஆற்றில் மீன் பிடிக்கச் சென்றவர் பலியான சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உழவனூர் பகுதியில் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தில் பணிபுரியும் உத்தியோகத்தரான கணேசமூர்த்தி குலேந்திரன் எனும் 33 வயதுடைய இளம் குடும்பஸ்தரே இவ்வாறு பலியாகியுள்ளார்.

நேற்றைய தினம் (11.12.2024) ஆற்றில் மீன்பிடிக்க சென்ற பொழுது வலிப்பு ஏற்பட்டதன் காரணமாக நீரில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக தர்மபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08. Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.12.2024 இல் வெளியிடப்பெற்றது.